மலர் 8

இதழ் 12

# வெற்றிமணி

சிறுவர் மாத இதழ்



வெற்றிமணி

சந்தாதாரர்களுக்கும்
விளம்பரதாரர்களுக்கும்
ஆதரவாளர்களுக்கும்
எமது
புதுவருட வாழ்த்துக்கள்!

கௌரவ ஆசிரியர்:

மு. க. சுப்பிரமணியம்

15-4-71

சதம் 30

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கௌரவ ஆசிரியர்: மு. க. சுப்பிரமணியம்

# வெற்றிமணி

## விளம்பர விகிதம்

| | | |
|---|---|---|
| வெளி அட்டை | ரூபா | 75-00 |
| உள் அட்டை | ரூபா | 60-00 |
| முதற் பக்கம் | ரூபா | 50-00 |
| உட் பக்கம் | ரூபா | 40-00 |

தொடர்ந்து விளம்பரஞ்செய்யின் 15 வீதக் கழிவுண்டு.

விபரங்களுக்கு எமக்கு எழுதுக.


வெற்றிமணி
253 1/1 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (இலங்கை)


★

## வருடச் சந்தா

பொங்கல் மலர்
தபாற் செலவுட்பட

| | | |
|---|---|---|
| இலங்கை | ரூபா | 5-00 |
| இந்தியா | ரூபா | 6-00 |
| மலாயா | $ | 6-00 |

## பொருளடக்கம்


தலையங்கம் ... ... ... ... ... 1
இந்தக் குறும்பு எங்கும் உண்டு 2
பரீட்சையிற் சித்தியடைவது ... 4
வாய்ப்பான ஒரு வழிகாட்டி ... 6
கவிதை அரங்கம் ... ... ... 10
கணக்கியலுக்கோர் அறிமுகம் 13
மாணவர் மத்தியில் அமைதி ... 17
மனித வாழ்க்கையில் தாவர.... 20
மரணம் ... ... ... ... ... 21
பஞ்சவர்ணக்கிளி ... ... ... 23


★

கடந்த எட்டு ஆண்டுகளாக
வெளிவரும்
ஈழத்துச் சிறுவர்
மாதப் பத்திரிகை


— வெற்றிமணி —

வெற்றிமணி டாண் எனவே விண்முட்ட ஒலித்திடுவாய்
நற்றமிழாம் எங்கள் மொழி நலமுற ஒலித்திடுவாய்.

மலர் 8 | 15 - 4 - 71 வியாழக்கிழமை | இதழ் 12


# தொழில் வேண்டும்

நாட்டிலே இன்றுள்ள தலையாய பிரச்சனை வேலையில்லாப் பிரச்சனை. படித்த இளைஞர்கள், பட்டம் பெற்ற இளைஞர்கள் செய்வது அறியாது தெருவில் நிற்கின்றார்கள். தெருவிலே நிற்பவர்களைப் பார்த்துப்பள்ளியிலே பயிலும் மாணவர்கள் படித்துத் தான் பயனென்ன? என்று சலிப்புக்கொள்கின்றனர், சோர்வடைகின்றனர்.

தெருவிலே எத்தனை நாட்களுக்கு நிற்பது. வேலைவரும் என்று எத்தனைகாலத்துக்கு நம்பி இருப்பது? எத்தனைபேரின் காலைப்பிடிப்பது? எத்தனை தடவை ஏமாற்றமடைவது?

எதையாவது செய்து பிழைப்போம் என்றால் அதை அவர்கள் பெற்றகல்வி அவர்களுக்கு அளிக்கவில்லை. இன்றைய சமுதாய அமைப்பு அதற்கு இடந்தருவதாகவுமில்லை.

பள்ளியிலே என்னவோ எல்லாம் படிக்கின்றார்கள். வெளியிலே வந்துபார்த்தால் படித்தவற்றை நாடுபடம் பிடித்துக் காட்டுவதாக இல்லை. அதாவது, நாட்டின் நிலைமைக்கு ஏற்பக் கல்வியமையவில்லை. இந்தக் கல்வித்திட்டம் —

(1) மாணவர்களுக்கு வேலை வாய்ப்பொன்றை உறுதியளிக்கின்றதில்லை.

(2) எதையும் செய்து பிழைக்க வேண்டுமென்ற மனப்பான்மையை வளர்க்கின்றதில்லை.

(3) நாட்டின் தேவைக் கேற்ப அமைகின்றதில்லை.

விஞ்ஞானம் விஞ்ஞானம் என்று விஞ்ஞானப்படிப்பில் பெருந்தொகைப் பணம் செலவழிக்கப்படுகின்றது. ஆனால் இந்த விஞ்ஞானத்தைக் கொண்டு அன்றாடு வாழ்க்கையை மாணவர்களால் நடாத்த முடியவில்லை. அதாவது முதலுக்கு ஏற்ற நயம் பெறப்படுவதில்லை. நயம் பெற வேண்டுமென்று யாரும் திட்டவட்டமாக எண்ணுவதாகவுமில்லை.

அதே சமயத்தில் அரசாங்கம் இதுபற்றி அறியாமலுமில்லை: நடவடிக்கைகள் எடுக்காமலுமில்லை. வேலையில்லாப் பிரச்சனையைத் தீர்ப்பதற்குப் பலவித நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது: அவை போதாதா? அவை செயல்படுத்தப்படும் வேகமும் போதாது.

பிற வேலைகளை விடுத்து எல்லா அமைச்சுக்களும் சேர்ந்து இதனையோர் 'உயிர் விடய'மாகக் கருதி உடன் ஆவன செய்தல் வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தக் குறும்பு எங்கும் உண்டு

இரசிகமணி கனக. செந்திநாதன்

பாடசாலைகளை மூடி இந்த விடுமுறை காலத்தை ஏன் விடுகிறார்களோ? வீட்டிலே பிள்ளைகளின் குழப்படி தாங்க முடியவில்லை. ஒன்று அடிக்கிறது; மற்றது அழுகிறது. ஏன் தான் அடித்தாய் என்று கேட்டால் உவன் என்னை ஒட்டகச் சிவிங்கி என்கிறான்; நான் உயரமாம். என்னைக் கேலி செய்தால் நான் விடுவேனோ? என்கிறான் அவன். என்ன பிள்ளைகள்?... என்ன வாழ்க்கை?...... என்று அலுத்துக் கொண்டார் என் நண்பர்.

உங்கள் வீட்டில் மாத்திரமா? எங்கள் வீட்டிலும் இதே நிலைதான்... எல்லா வீடுகளிலும் - குழந்தைகள் இருந்தால் குழப்படி இருந்து கொண்டுதான் இருக்கும். இங்கு மாத்திரமல்ல. சிவபெருமான் இருக்கின்ற - நமது முழுமுதற் கடவுள் உறைகின்ற - கைலையங்கிரியில்கூட அவர் பிள்ளைகள் கணபதியும் முருகனும்கூடச் சதா ஏதாவது குறும்புகள் செய்து கொண்டுதான் இருக்கிறார்கள் என்றேன் நான்.

ஆமாம். எனக்குக்கூட ஒரு பாடல் நன்கு தெரியும். கற்பனைக் களஞ்சியமான சிவப்பிரகாச சுவாமிகள் பாடியது அது. ''அரனவனிடத்திலே ஐங்கரன் வந்து நின்றைய என் செவியை மிகவும் அறுமுகன் கிள்ளினான்'' என்று அழுது கொண்டு சொல்லும் பாடல் அது. அருமையான பாடல் என்றார் நண்பர்.

அதைப்படியெடுத்த பாடல்தான் இதுவும். ஆனால் இது புதுப்பாடல். கணபதியும் முருகனும் ஒருவரை ஒருவர் கேலி செய்து விளையாடுகிறார்கள். கவிஞர் ஒருவர் சிவப்பிரகாச சுவாமிகளைப்போலக் கற்பனை செய்து பாடுகிறார். பாடலைச் சொல்கிறேன் கேளுங்கள் என்றேன் நான்.

முருகன்தான் முதன்முதலில் கணபதியை வம்புக்கு இழுக்கிறான். எனக்கு ஆறுமுகங்கள் இருக்கின்றன. உனக்கு ஒன்றே ஒன்றுதான் இருக்கிறது. உன்னிலும் பார்க்க நான் பெரியவன்'' என்கிறான் முருகன்.

எனது வயிற்றைப்பார். பெருவயிறு. உன்வயிறு சிறிது. ஆறுமுகம் இருந்தென்ன? வயிறு சிறிதுதானே அதனால் நானே பெரியவன் என்கிறான் கணபதி.



போ. போ. சும்மா உளறாதே. எனக்குப் பன்னிரண்டு கைகள் இருக்கின்றன. உனக்கு ஐந்து கைகள்தானே உண்டு இப்போது சொல். யார் பெரியவன்? ... இது முருகன்.

எனக்குத் தும்பிக்கை ஒன்றே போதும். அப்பா தந்த மாங்கனியை அதுவே பெற்று உனக்கு ஏமாற்றத்தை அளித்தது'' ...... இது கணபதி வாக்கு. என்னைச் சாமி என்கிறார்கள். சாமி என்றால் தலைவன். தலைவன்தானே உயர்ந்தவன் என்கிறான் முருகன். எனக்கு 'முன்னோன்' என்னும் பெயர் உண்டு. எதற்கும் முதன்மையுள்ளவன் நான்தான் என்கிறான் கணபதி. முன்னோன் என்பதற்கு முருகன் புதுப் பொருள் காண்கிறான். முன்னல் என்றால் நினைத்தல். உலகியலை நினையாதவன் நீ என்கிறான் அவன். கணபதி சிரித்துக் கொண்டு ''மன்னுகலை உணர்புலவன் நீ'' உன்னோடு வாதாட முடியுமா? என்று அணைத்துக் கொள்கிறான்.

இதோ பாடலைப் பாருங்கள். விநாயகர் துதியாக அமைந்த பாடல் இது:-

முருகனவன் யானறு முகமுளேன் நீஒற்றை
  முகமுடையை யார் பெரியரோ
மொழியென்ன எனதுபெரு வயிறுநின் வயிறுமே
  மொழியுமென அவன் எனக்கா
றிருகரம் நினக்கைந்து கரமே எனப்புகல
  என்துதிக் கரம தொன்றே
இனிய மாங்கனி எனக்குதவி நிற்கேக்கறல்
  இயற்றலை மறந்தனை யெனக்
குருமொழிசொல் சாமியாம் பெயரெவர்க் கென்றவன்
  கூறமுன் னோனெனும் பேர்
கொண்டவன் யாரென்ன உலகியலை நினையாத
  கொள்கையினை நீ யாதலான்
வருபெயர் நினக்கென மறுத்திடச் சினமொரீஇ
  மன்னுகலை யுணர்புலவன் நீ
வாதுசெய வல்லையென் றவனை நேயங்கொண்டு
  மகிழ்களி றெனைக் காக்கவே.

இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் தஞ்சைமா நகரத்தில் வாழ்ந்த சதாவதானம் சுப்பிரமணிய ஐயர் பாடல் இது என்றேன். கைலையங்கிரியில் இந்தக் குறும்புகளைக் கடவுளே பொறுத்துக் கொள்கிறார். நாம் பொறுத்தாலென்ன என்று கூறி வீடு திரும்பினார் நண்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரீட்சையிற் சித்தியடைவது எப்படி?

வி. கந்தவனம், பி. ஏ.

துரோணாச்சாரியார் தனது மாணாக்கருக்குத் தொலைவிலே நிற்கின்ற மாமரத்தின் உச்சியிலேயுள்ள கனியொன்றைக் காட்டி அதனை அம்பினாலே வீழுத்தச் சொன்னான். துரியோதனன் குறிபார்த்து நின்றான். அவன் நிற்கின்ற நிலையைக் கண்டோ என்னவோ துரோணர் ஒரு கேள்வி கேட்டார். 'துரியோதனா, உனக்கு இப்பொழுது என்ன தெரிகிறது?' 'எனக்குத் தங்களைத் தெரிகின்றது; மாமரத்தைத் தெரிகின்றது; கொப்புகள் தெரிகின்றன; மாங்கனி தெரிகின்றது' என்று பதிலளித்தான் துரியோதனன். 'நீ மாங்கனியை விழுத்த மாட்டாய்' என்கின்றார் குரு. 'விழுத்துகிறேன் குருவே' என்று அம்பை விட்டான் துரியோதனன். மாங்கனி விழவில்லை.

அர்ச்சுனன் வந்தான்; அம்பை நாணேற்றிக் குறியெடுத்து நிற்கின்றான். 'அர்ச்சுனா, உனக்கு இப்பொழுது என்ன தெரிகின்றது?' அதே கேள்வியைத் துரோணர் மீண்டுங் கேட்கின்றார், துரியோதனனுக்கு விளக்கம் அளித்தற்பொருட்டு. உனக்கு என்னைத் தெரிகிறதா? 'இல்லை' என்று பதில் அழிக்கின்றான் அர்ச்சுனன். மாமரத்தை தெரிகின்றதா? இல்லை. கொம்பர்கள் தெரிகின்றனவா? இல்லை. மாங்கனி தெரிகின்றதா? இல்லை. அப்படியென்றால் வேறு என்ன தெரிகிறது? 'எனக்குக் காம்பு ஒன்றைத் தவிர வேறு ஒன்றையுந் தெரியவில்லை.' சரி 'விடு அம்பை' என்றார் துரோணர். மாங்கனி பொத்தென்று விழுந்தது.

குறியைச் சரியாகப் பார்க்காத துரியோதனன் கண்களுக்குக் குறிப்பொருளிலும் புறப் பொருள்களே அதிகம் தெரிந்தன. ஆதலால் மாங்கனியை அவனால் விழுத்த முடியவில்லை. ஆனால் குறியைத் திருத்தமாக எடுத்த அர்ச்சுனனுக்குக் குறிப்பொருள் ஒன்றைத் தவிர வேறு ஒன்றுமே தெரியவில்லை. அதனாற்றான் மாங்கனியை அவனால் விழுத்த முடிந்தது.

இவ்விதப் படிப்பிலே கண்ணாயினார்க்கு வேறு எதிலும் பிடிப்பு வராது.



சரி. நோக்கம் இருக்கிறது. படித்து முன்னேற வேண்டும் என்ற நோக்கம் இருக்கிறது. இந்த நோக்கத்தை மனதில் இருத்திக் கொண்டு விளையாடித் திரிந்தால் படித்து முன்னேறிவிட முடியாது. அல்லது நாலுபேருக்கு நான் படித்து முன்னேற வேண்டும்; நான் படித்து முன்னேற வேண்டும் என்று சொல்லிச் சொல்லிச் சும்மா விருந்தால் நோக்கத்தை அடைந்துவிட முடியாது.

நோக்கத்தை நிறைவேற்ற, எண்ணியது நடந்தேறப் பாடுபட்டுப் படிக்க வேண்டும். ஊக்கத்தோடு உழைக்க வேண்டும். ஒழுங்காகத் திட்டமிட்டுப் படிக்க வேண்டும். படிப்பிலே கண்ணுங் கருத்துமாக இருத்தல் வேண்டும். படிப்பிலே கண்ணுங் கருத்துமாக இருக்கும் ஒரு பிள்ளைக்கு வேறு எண்ணங்கள் தலைப்பட முடியாது. வேறு சாட்டுகளும் குறுக்கிட முடியாது.

சாட்டுகள் காட்டித் தமக்குத் தாமே ஆறுதல் கூறுகின்றவர்கள் தம்மைத் தாமே ஏமாற்றிக் கொள்பவராவர். எரிக்க எண்ணெய் இல்லையென்றும், எழுத பென்சில் இல்லையென்றும், வீட்டில் வேலைஅதிகம் என்றும், விளையாட்டால் கால் கை முறிந்ததென்றும் கூறுவதற்கா காரணங்கள் இல்லை. இவை யாவற்றுக்கும் மேலாக சில மாணவர்கள் 'பஞ்சியாய்க் கிடக்கு'தென்றும் படுத்துக்கொள்வார்கள்.

இவ்விடயத்தில் ஆபிரகாம் இலிங்கனின் இளமைக்கால வாழ்க்கை வரலாற்றை மாணவர்கள் உணர்ந்து கொள்ளுதல் நன்று. ஆபிரகாம் இலிங்கன் ஏழைக் குடும்பத்திலே பிறந்தவர். எவ்வித வசதியும் அவருக்கு இருக்கவில்லை. இரவலாகவே பல நூல்களை வாங்கிப் படிப்பார். அவ்விதம் இரவல் வாங்குவதற்குப் பல மைல்கள் தூரம் நடந்து நடத்து அலைந்த கதைகளோ பல. படிக்க வேண்டுமென்ற ஆர்வம் மேலீட்டினால் அவர் பட்ட தொல்லைகள் அவருக்கு தொல்லைகளாகவே படவில்லை. பாடுபட்டுப் படித்தார். நாடு அவரைச் சனாதிபதியாக்கியது.

> ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
> ஊக்கம் உடையான் உழை

என்பது தெய்வமொழி.

குறைவில்லாத ஊக்கமுடையவர்களைத் தேடி ஆக்கம் தானாகவே வந்து சேரும் என்கிறார் திருவள்ளுவர் பெருமான். ஊக்கத்தோடு படிக்கின்றவர்களுக்குச் சித்தி எளிதாகவே வந்து கிட்டும். இந்தக் குறளைப் பரீட்சித்துப் பார்க்க வேண்டுமா? இப்பொழுதே அசைவிலா ஊக்கத்தோடு—சோர்விலா ஊக்கத்தோடு படிக்கத் தொடங்குங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற இதழ் தொடர்ச்சி

# வாய்ப்பான ஒரு வழிகாட்டி

கவிஞர். செ. கதிரேசர்பிள்ளை

சீதா சமேத ஸ்ரீராமன் காட்சியைக் காண்கிறோம் ஐந்தாம் அங்கத்திலே. திருவாசகப் பொருள் யாதெனக் கேட்ட தில்லையந் தணருக்குச் சபாநாயகப் பெருமானே பொருளென மணிவாசகர் சுட்டிக் காட்டியவாறு போல, பன்னீராயிரம் பாடல்களால் இராமாயணம் நுதலிய பொருள் சீதா சமேத ராமனின் திவ்விய காட்சியே என்பது இக்கவிஞர் கருத்து. நூல்கள் இறைவனை உணர்த்த வேண்டும் என்ற நம் முந்தையோர் கொள்கையின் உறைப்புக் கவிஞர் கவிதையிலே பளிச்சிடுகிறது, கம்பன் படைத்த இராம சீதா சௌந்தரியத்தில் கவிஞரின் ஈடுபாடு மிகப் பெரிதென்பதை அவர் காட்டும் கவிதைகளைப் படித்து அநுபவித்துக் கொண்டே நாமும் அவர் தங்கிய சுழுத்திப் பிரதேசத்திற் சஞ்சாரம் செய்கிறோம். காட்சி முடிவுறுகிறது. திடீரென, சந்திர உலக யாத்திரீகர் பசிபிக் கடலில் வீழ்ந்தது போல கீரிமலைக் கடற்கரை தெரிகிறது நமக்கு. ஆம் கவிஞர் கற்பனைத் தேரினின்று குதித்துவிட்டார்; நூற்றோராம் பாடல் வருகிறது.

கீரிமலையினிலே — நலந்தரும்
கேணியருகினிலே
ஊருறங் கும்மிருட்டில் — இருப்பதை
உற்றுணர்ந் தேயெழுந்தேன்.

கவிஞர் வீடு குறித்தேக எழுந்துவிட்டார்: நாமும் எமது மேனியிற் படிந்தவெண்மணலைத் தட்டிக் கொண்டு கிளம்ப ஆயத்தமாகின்றோம் என்ற உணர்ச்சியைப் பெறுகிறோம். ஐந்தாம் அங்கமும் நூலின் முடிவும் இவ்வாறு அமைகின்றன.

இவ்வளவாகக் கவிதை நூலின் உட்பொதிந்த பொருளமைதியை ஒருவாறு விளக்கினேன். இனி, இந் நூல் பற்றிச் சில கூறலாம் எனத் துணிகிறேன். முழுநூலினும் அசையாது தளராது நிற்கும் கற்பனை கவிஞரின் ஒருமையை நன்கு வெளிப்படுத்துகிறது. பிரதேச வாடை கமழ அநாயாசமாகவும் பொருத்தமாகவும் வந்து கலந்த உவமைகள் தித்திக்கின்றன.

நிலப்பட் டாடையிலே — பழுத்தப
லாலித் தக்காளியெலாம்
சாலப் பிசைந்தெறிந்தார் — யாரெனத்
தானையம் மேலெழவாய்



காணப்படுகிறது செவ்வானம். இஃதொன்று யான் மேலே காட்டிய கருத்துக்களை உணர்த்தப்போதும். இப்படிப் பல.

நல்லவர் போன்ற பொய்யர், பாசாங்கு காட்டும் அறிவாளிகள், போலித் தடபுடல் செய்வோர் ஆகியோரை நையாண்டியும் கிண்டலும் செய்வதோடு வஞ்சப் புகழ்ச்சியாகக் கவிதை கூறிச் செல்லும் பாங்கு இக் கவிஞரின் பெருமையை நன்குயர்த்துகின்றன. இச்செய்தியே நூல் முழுவதும் கிடப்பதால் உதாரணம் காட்ட விரும்புகிலேன்.

கிராமியச் சீர்தொடைகள் கவிகள் சிலவற்றிலே புகுந்து அழகு செய்கின்றன. 59, 60ஆம் பாடல்கள் இதற்குச் சான்றாக அமைகின்றன.

நூலைப் படித்து முடித்தவுடனே கவிஞரின் குண இயல்பு ஒவ்வொன்றும் ஒவ்வொரு வடிவில் வந்து நம்முன்னே குதிக்கும் அளவுக்குத் தம்மத நிரூபணம் செய்துள்ளார் கவிஞர்.

1. வள்ளுவர் கண்ட முடியாட்சியே மாநிலம் பயன்படச் செய்வது;
2. கம்பராமாயணம் நிகரிலாப் பெருங்காவியம்;
3. முற்றக் கற்றாலன்றி மூச்சுவிடலாகாது;
4. நூல் கற்றுமுடிய அதன் காரணமாக வாலறிவன் காட்சி பெற நூலமைய வேண்டும்;
5. புலவரைப் புரக்கும் புரவலர் இன்றேல் தமிழ் மொழி வளராது;
6. காலத்துக்கு ஏற்பக் கவிச்சொல் மாற்றமும் புதுமையும் அடைய வேண்டும்;
7. கற்ற பெரியோர் கனம் பண்ணப் படவேண்டும்;
8. பண்டைப் பெருமையைத் தமிழ் பேணிக் காக்கவும், இலக்கிய கருத்தாக்களின் இலட்சியக் கனவு நனவாகவும் வாழ வேண்டும்;
9. மரபு வழி பிறழாது கவியுலகு தமிழ் செய்ய வேண்டும்;

என்ற இந்த நவமான கொள்கைகள் கொண்டுள்ளார் கவிஞர் என்பதை நூலின் வழி நின்று ஆயும்போது நாம் உணர்கிறோம். இவை நலந்தரும் கொள்கைகள்தாமே.

இனி, மூன்றாவது கவிதையினிறுதி நடப்பதுவாய், எனக்குளகமாகிறது. தொடர்ந்து குளகச் செய்யுள்களே அமைந்து பதின்மூன்றும் பாடலில் மாலைமகள் வரைந்த என்பதிலுள்ள பெயரெச்சத்தோடு கருத்து முற்றுப்பெறுகிறது. இடையிலேயுள்ள கவிதைகளின் இறுதி சில, எண்ணிடவாய், திக்கிடவாய், என்பதுவாய், மேலெழவாய், என எச்சமாகி நிற்றலைக்காண்கிறோம். வாய் எனநிற்கும் இறுதிச் சொற்கள் 'ஆய்' என்ற எச்சமெனவே கொள்ளவேண்டும். 'ஆய்' என்பது 'ஆக' என்ற எச்சந்திரிந்து ஆகியது எனவே,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடப்பதுவாக; நடப்பதாக......வரைந்த என முதற்பாட்டினிறுதி வரைந்த எனும் பெயரெச்சத்தைப் பொருத்தமாகச் சேர்கிறது. மற்றையவை அங்ஙனம் சேர்வதில் சிறிது முரண்படுகின்றன போல உணர்கிறேன்.

எண்ணிடவாய் – எண்ணிடவாக. எண்ணிடவாக என ஒரு சொல் அமைப்பு மிகப்புதுமை. எண்ணுதற் பொருட்டு - எண்ணும் வண்ணம் என்று பொருள் கொள்ளல் வேண்டும். அப்பொழுதுதான் பதின்மூன்றுவரியிலுள்ள 'வரைந்த' என்ற பெயரெச்சத்துடன் முட்டின்றிப் பொருந்தும். ஆயினும் அவ்விதம் பொருந்துவதற்கு 'எண்ணிட' என்ற அளவே போதும் என்பது என் கருத்து.

ஏழாம் பாடலின் இறுதியிற் சிறிது மயக்கம் காண்கிறேன். 'தானையம்' என்ற தொடர் சிறிது மலைப்பைத்தந்தது. இத்தொடரைப் படிக்கும்போது 'தானயம்' என்றே படிப்போம். அங்ஙனம் பாடும்போது பொருள் புலப்படாது நிற்கிறது. தான் + ஐயம் - தானையம். புணர்ச்சி சரியேயாயினும், ஐ மூவழியும் மாத்திரையிற் குறைவ, தாலும், ஐயம் என ஐகாரத்தைச் சிறிது அழுத்தியுரைத்தால் அக்கவிதைகளிலே கவிஞர் அமைத்திருக்கும் அந்த 'ஈற்றயற்சீர்' விளச்சீர் அமைப்புக்குரிய மாத்திரையிற் சிறிது மிக்கொலிந்து நிற்பதாலும் அவ்வரி பொருளுணர்வுக்கு அல்லது சந்த இசைவுக்குச் சிறிதளவு குறைபாடுள்ளதாகத் தோன்றுகிறது. இது, மாலைகள் வரைந்த ஓவியத்தில் கவிஞர் தன்னை மறந்து கலந்ததன் விளைவு போலும்.

இனி, நூல் அமைப்பைப்பற்றிச் சிறிது நோக்குவோம். மேலட்டை வண்ணப் புகைப்படமாகும். 'கீரிமலையினிலே' என்ற தலைப்பு உண்மையாகவே பொன்னெழுத்துத்தான். செக்கர்வானச் செவ்வண்ணம் சிந்த அதைதாங்கிநிற்கும் கடற்கரை மாட்சியிலே எம்மை மறந்து சொக்கவைக்கிறது மேலட்டை. உள்ளே அச்சுப் பதிவு மிகப் பிரமாதம். சிறந்த தாளில் கணிசமான அளவு எழுத்துக்களால் அமைந்து விளங்கும் கவிதைகள் கருத்தைமட்டுமா அள்ளுகின்றன கண்களையுந்தாம். நூற்பதிப்பு திருமகள் அழுத்தகத்தில் நிகழ்ந்தது. நூற்பதிப்பு வேலைகளில் திருமகள் அழுத்தகத்தாரின் புகழ் மலைவிளக்கல்லவா - இதிலே கவிஞருக்கு முழுவெற்றி.

இந்நூல் காவியமன்று. மரபுவழிக் கவிஞராகிய இந்நூலாசிரியர் இதைக் காவியமென்று கருதிப் புனைந்தாரென யான் கூறத் துணியேன். இது உண்மையாகவே கவிஞரின் உள்ளக் குமுறல்களின் காரணங்களுக்கான நிகழ்ச்சிகளின் உணர்ச்சி வெளிப்பாட்டுக் கற்பனைத்தொகுப்பே என்பது எனது முடிவு.

இக்கவிதைநூல் இற்றை நாள் தமிழர் நிலைமையை வெளிப்படுத்திக் காட்ட அமைந்த மிகச் சிறந்த கவிதை நூல். புதுக்கவிஞர்கள் வழிப்படுதற்கு மிகமிக வாய்ப்பான ஒரு வழிகாட்டி.

(முற்றிற்று)

# பேனா நண்பர் சங்கம்

உலகத்தின் பலபாகங்களிலு முள்ளவர்களைக் கடிதமூலம் அறிந்துகொள்ளவும், ஒருவர் கஷ்டத்தை மற்றவரிடம் கூறி ஆறுதல் கொள்ளவும், நல்லவர் உறவைப் பெறவும், தங்கள் தங்கள் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளவும் இச்சங்கம் உதவியாக இருக்கும்.

1. சங்கத்தில் சேர 50சத முத்திரை / போஸ்ரல் ஆடர் அனுப்புக.
2. பெயர், முகவரி, வயது இவற்றைவிட அறிந்த பாஷைகள், விளையாட்டுக்கள், பொழுதுபோக்குகள், மற்றும் திறமைகள் ஆண், பெண் இருபாலாரும் கடிதம் எழுதலாமா என்ற விபரங்களை 25 சொற்களுக்கு மேற்படாது எழுதி அனுப்பவும்.
3. தோழர் தோழர்களுக்கும், தோழியர் தோழியர்களுக்குமே எழுதலாம். ஆனல் இருபாலாரும் எழுதலாம் எனக் குறிப்பிடின் எவரும் எழுதலாம்.
4. வயதுக் கட்டுப்பாடின்றி உலகத்தின் எப்பகுதியிலுள்ளவரும் சேரலாம்.
5. தங்கள் புகைப்படங்களை இப்பகுதியில் வெளியிட விரும்புகிறவர்கள் புளக் (Block) அனுப்பவேண்டும். புளக் இல்லாவிடில் புளக்செய்ய புகைப்படத்துடன் ரூ. 7-50 அனுப்பவேண்டும்.

**வெற்றிமணி, $253\frac{1}{1}$ ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**

# வெற்றிமணி மாணவர் மன்றம்

மாணவர் மன்றத்தில் 22 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் சேரலாம். பாடசாலையிற் படிப்பவர்கள் வயதுக் கட்டுப்பாடின்றிச் சேரலாம். விண்ணப்பத்துடன் 50சத முத்திரை அல்லது போஸ்ரல் ஆடர் பிரவேசக் கட்டணமாக அனுப்பவேண்டும். தமிழகத்திலுள்ளவர்கள் வெற்றிமணியிலுள்ள தமிழகப் பிரதிநிதியின் முகவரிக்கு அனுப்புக.

## அங்கத்தவர் விண்ணப்பப் பத்திரம்

அன்புள்ள மணி மாமாவுக்கு,

மாணவர் மன்றத்தில் என்னை அங்கத்தவராகச் சேர்க்கவும்.

செல்வன் / செல்வி ................................

பாடசாலை முகவரி ................................

வீட்டு முகவரி ................................

பிறந்த திகதி ............ வயது ............ வகுப்பு ............

கடிதத்தொடர்பு ஆண், பெண் இருபாலாரும்.

................................ ................................

ஆசிரியர் / பெற்றோர் கையொப்பம் கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதை அரங்கம்



## "மலரே நானே நீயானால் . . . ."

திருமதி பா. சண்முகராசா. பி. ஏ. (இளவரசி)

பட்டுப் போன்ற மேனியுடன் பருவப்பெண்ணின் ஒயிலுறையும்,
தொட்டுப் பார்க்கத் தூண்டிவிடும் தோற்றமீர்க்கும் காந்தமதாய்
நட்டு வளர்க்கும் பெற்றோரின் நனவிற்கரிய விருந்தாக
மொட்டு விரிந்து மலரான மோகன ரோஜா மலரேகேள்!

கிட்ட நெருங்க முடியாமற் கிறங்கிச் சோர்ந்துன்னையே
எட்டி நின்று பார்ப்பதற்கு ஏணிவைக்கும் மலர்கோடி
மட்டம் தட்டி வீண்பெருமை யனைத்துமழிய மலர்களுக்கே
கெட்டிக்கார மலரேநீ கர்வம் ஏனோ கொள்ளவில்லை.

உன்னைப்போல வாழ்வதற்கு விழையும் மலர்கள் மாத்திரமா
தன்னை மறக்கும் மக்கள்உந்தன் தனியழகை நினைக்கின்றார்
கன்னி யென்றும் பெண்ணென்றும் கருதியுன்னை நாடினிற்க
பொன்னைப்புகழை விரும்பாத புண்ணியன் போன்றேன் சிரிக்கின்றாய்.

உன்னைப்பார்த்து வியக்கின்றேன் உறுதிகண்டு மதிக்கின்றேன்
என்னஎண்ணிச் சிரிக்கின்றாய் எதனைக் குறித்துக் களிக்கின்றாய்
சின்னஎண்ணம் பலகொண்டு சீரழியும் மக்கள் பலர்
இன்னவிதமாய் வாழ்க வென்று இயம்புகின்றாயோ சிரிப்பதனால்.

கவிஞன் விரும்பும் கருத்தாக காதலர்ஈயும் பரிசாக
புவியில் வாழும் உன்வாழ்வைப் போற்றுவார்கள் பலர்கோடி
தவிக்கின்றேன்ஓர் ஆசையினால் தளர்கின்றேன் அவ் வேட்கையினால்
அவிந்து என்உடல் மறையமுன்னே அடையவேண்டு முன்பிறவி.

மலரே, நானே நீயானால் மணத்தைப்பரப்பி வாழ்ந்திடுவேன்
சிலநாள் புவியில் வாழ்ந்தாலும் சிரிப்பால்உண்மை விளக்கிடுவேன்
பலநாள் வேண்டாம் பாரினிலே பண்புபொலியும் வாழ்க்கையிலே
சில நாள் வாழும்உன்னைப்போல் 'மலரே, நானே நீயானால்'

மலரே, நானே நீயானால் மயக்கம்ஓடி மறைந்திடவே
பலமே யில்லாக் கோழைபோற் பதுங்கியொடுங்கி வாழாமல்
குலமேயொன்று எனக்காட்ட குப்பையிலும் ஒளிச் சிரிப்புடனே
நலமேமலர நானிலத்தில் தன்னலம் அகற்றி வாழ்ந்திடுவேன்.



நாட்டின்நலமே தன்நலமாய் வாழ்ந்த பெரியோர் கழுத்தினிலே
தீட்டும்ஓவியன் கண்களிலே தூய கவிஞன் சிந்தனையில்
பாட்டுக்கிசைபோல் வாழுமந்த பண்பு மனைவி சிகையினிலே
காட்டஉண்மை உலகினிலே காலா காலம் வாழ்ந்திடுவேன்.

எத்தனைபிறவி யெடுத்தாலும் எந்த உலகம் சென்றாலும்
அத்தனைபிறவி வாழ்க்கையிலும் அழகு மலராய் நானுதிக்க
சித்தம்செயல்களை ஒன்றாக்கி சிந்தனையை நல்வழி யாக்கி
நித்தம் இறைவன் பாதத்தினை துதிக்கின்றேன் இவ்வரம்நாடி.

பாடிவரும் தேனீக்கள் பண்ணிசைக்கும் வண்டினங்கள்
தேடிஉன்னை அடைவதனால் தெவிட்டா இன்பம் துய்க்கின்றார்
நாடிநிற்கும் ஏழைகளை நானிலம் எங்கும் காண்கின்றேன்
கோடிகொடுக்க வழியேது, குறையைப் போக்க வழிகாண்பேன்.

அமரர் நேருவின் மார்பினிலே அழகுமிளிரச் சிரித்தாயே
எமனுக்கேனோ பொறுக்கவில்லை எரியும் தீயால் அவித்துவிட்டான்
அமரர்நேரு மடிந்தாலும் அழியாக் கொள்கை பின்பற்றும்
குமரர் பலரின் மார்பினிலே குன்றாச்சிரிப்பைப் பொழிவாயே.

* *
* *

## பாடுதே !

— சரணுகையும் —

சின்னச் சின்ன மலர்களில்
    சிறிய வண்டு மொய்க்குதே
எண்ணம் போல மதுவுண்டு
    இனிய கீதம் பாடுதே.

சிவந்த அலகை நீட்டியே
    சின்னக் கிளியும் கேட்குதே
உவந்து தந்த கனிகளை
    உண்டு மழலை பேசுதே!

கரிய குயில் பாடுதே
    கள்ள மின்றிப் பாடுதே
சிறிய மனிதன் புத்தியை
    சிந்தை நொந்து பாடுதே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'தயங்காதே'

அ. அரசரெத்தினம், சேனையூர்-6

இல்லை என்று இருக்காதே - பிறரை
இரந்து வாழ எண்ணுதே
தொல்லை கண்டு மயங்காதே - கமத்
தொழிலைச் செய்யத் தயங்காதே!

இன்பம் கண்டு சிரிக்காதே - பிறர்க்கு
இடர்கள் செய்ய எண்ணுதே
அன்பை என்றும் அழிக்காதே - பொல்லா
ஆத்திரத்தை வளர்க்காதே!

இச்சை அதிகம் கொள்ளாதே - எதையும்
எண்ணுமல் பணி செய்யாதே
கொச்சைத் தமிழில் பேசாதே - என்றும்
கொடியோர் உறவை வளர்க்காதே!

வட்டிப் பணத்தைச் சேர்க்காதே - உன்னை
வைதோரைப் பழி வாங்காதே
தட்டிப் பேச எண்ணுதே - தேன்
தமிழை வளர்க்கத் தயங்காதே!

* * *

## இன்பப் பொங்கல்

ந. கிரிதரன் வண்ணர்பண்ணை.

அரிசியால் மக்கள் பொங்கிடும் பொங்கல்
அகிலமெல்லாம் அளித்திடும் பொங்கல்
பரிதியை நோக்கிப் பொங்கிடும் பொங்கல்
பாவை வணங்கிப் போற்றிடும் பொங்கல்.

பல இன மக்கள் சேர்ந்திடும் பொங்கல்
பாலர்கள் ஆடிப் பாடிடும் பொங்கல்
ஞாலத்தில் இன்பம் சேர்ந்திடும் பொங்கல்
நாங்கள் மகிழ் வெய்திடும் பொங்கல்.



## கணக்கியலுக்கோர் அறிமுகம் (32)

வை. சி. சிவஞானம்

### 7. வங்கிக் கணக்கிணக்கக் கூற்று

வங்கிக் கணக்கிணக்கக் கூற்று என்பது ஒரு குறித்த திகதியில் காசேட்டு வங்கி நிரல் மீதியும் வங்கிக் கூற்று மீதியும் வித்தியாசப்படுவதற்குரிய நடவடிக்கைகளைக் கண்டு பிடித்து இரு கணக்கு மீதிகளையும் சமப்படுத்தி இணைத்துக் காட்டுதலாகும். இதைப் பெரும்பாலும் நான்கு முறைகளில் செய்கிருர்கள். அவையாவன:

I. வங்கிக் கூற்று மீதிக் கேற்ப காசேட்டு மீதியை இணக்குதல்.

II. காசேட்டு வங்கி நிரல் மீதிக்கேற்ப வங்கிக் கூற்று மீதியை இணக்குதல்.

III. காசேட்டு வங்கி நிரலைச் செம்மையாக்கி, வங்கிக் கூற்று மீதிக் கேற்ப இணக்குதல்.

IV. காசேட்டிலும் வங்கிக்கூற்றிலும் பதிய வேண்டிய நடவடிக்கைகளைப் பதிந்து இரு தொகைகளையும் இணக்குதல்.

### I. வங்கிக் கூற்றுக்கேற்பக் காசேட்டைத் திருத்துதல்.

காசேட்டு வங்கி நிரல் மீதியுடன், வங்கிக் கூற்றில் பதியப்பட்டுக் காசேட்டில் பதியப்படாத நடவடிக்கைகளையும், காசேட்டில் பதியப்பட்டு வங்கிக் கூற்றில் பதியப்படாத நடவடிக்கைகளையும், அவற்றின் தன்மைக்கேற்பக் கூட்டி அல்லது கழித்து, காசேட்டின் தவறுகளைத் திருத்தி வங்கிக் கூற்று இணக்கஞ் செய்யப்படுகின்றது. காசேட்டு வங்கி நிரல் மீதியிலிருந்து வங்கிக் கூற்று மீதியைக் கண்ட உதாரணத்தைப் பார்க்கவும்.

### II. காசேட்டு மீதிக் கேற்ப வங்கிக் கூற்று மீதியை இணக்குதல்:-

வங்கிக் கூற்று மீதியுடன், வங்கிக் கூற்றில் பதியப்பட்டுக் காசேட்டில் பதியப்படாத நடவடிக்கைகளையும், காசேட்டில் பதியப்பட்டு வங்கிக் கூற்றில் பதியப்படாத நடவடிக்கைகளையும், காசேட்டில் நிகழ்ந்த தவறுகளையும், அவற்றின் தன்மைக் கேற்பக் கூட்டிக் கழிப்பதனுல் வங்கிக் கூற்றுக் கிணக்கஞ் செய்யப்படுகின்றது. வங்கிக் கூற்று மீதியிலிருந்து காசேட்டு வங்கி நிரல் மீதியைக் கண்ட உதாரணத்தைப் பார்க்கவும்.

### III. காசேட்டைச் செம்மையாக்கிய பின் வங்கிக் கூற்று மீதிக்கேற்ப இணக்குதல்:-

வங்கிக் கூற்றில் பதியப்பட்டுக் காசேட்டு வங்கி நிரலில் பதியப்படாத நடவடிக்கைகளைப் பதிவதனுலும், காசேட்டின் தவறுகள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிழைகளைத் திருத்துவதனுலும் காசேட்டைச் செம்மையாக்கலாம். காசேட்டைச் செம்மையாக்கியபின் இருவகை நடவடிக்கைகளே பெரும்பாலும் வித்தியாசத்துக்குக் காரணமாயிருக்கும். அவை யாவன:

(அ) வங்கிக் கனுப்பி வங்கியால் வசூலிக்கப்படாத காசோலைகள்.

(ஆ) வழங்கப்பட்டு வங்கியில் மாற்றப்படாத காசோலைகள்.

## காசேட்டுச் செம்மையாக்கலில் தந்த உதாரணக் கணக்கின் வங்கிக் கணக்கிணக்கக் கூற்று:-

| | | |
|---|---|---|
| | 30-11-70 காசேட்டுச் செம்மையாக்கிய மீதி | 2110 |
| கூட்டுக:- | வங்கியில் மாற்றப்படாத காசோலைகள் | 595 |
| | | 2705 |
| கழிக்குக:- | வங்கியால் வசூலிக்கப்படாத காசோலைகள் | 475 |
| | 30-11-70 வங்கிக் கூற்று மீதி | 2230 |

## IV. காசேட்டிலும் வங்கிக் கூற்றிலும் பதியவேண்டிய தொகைகளைப் பதிந்து இரு தொகைகளையும் இணக்குதல்:-

காசேட்டு வங்கி நிரல் மீதியுடன், காசேட்டில் பதியப்படாத வங்கிக் கூற்று நடவடிக்கைகளைப் பதிந்து காசேட்டின் தவறுகளையும், பிழைகளையும் திருத்துதல் வேண்டும்.

வங்கிக் கூற்று மீதியுடன் காசேட்டில் பதியப்பட்டு வங்கிக் கூற்றில் பதியப்படாத நடவடிக்கைகளைப் பதிந்து வங்கிக் கூற்றில் தவறுகள் ஏதாவது இருந்தால் அவற்றைத் திருத்துதல் வேண்டும். வங்கிக் கூற்றுக்கள் பெரும்பாலும் தவறுகள் பிழைகளின்றியே இருக்கும்.

வங்கியால் வசூலிக்கப்படாத காசோலைகளுக்குரிய பணத்தைக் குறித்த திகதியின் பின்னர் பெரும்பாலும் வசூலிக்கப்படும். மாற்றப்படாத காசோலைகள் குறித்த திகதியின் பின்னர் வங்கியில் கொடுத்து மாற்றப்படும். இவற்றில் மறுக்கப்படும் காசோலைகள் குறைவு ஆகையாலும் காசேட்டில் மறுக்கப்பட்டபின் பதிவதே முறையாகையாலும் அவற்றை வங்கிக் கூற்றுடன் சேர்த்தல் வேண்டுமென இவ்விதம் வங்கிக் கணக்கிணக்கஞ் செய்வோர் கூறுவர்.

உ+ம்: ஒரு சில்லறை வியாபாரியின் காசேட்டு வங்கிநிரல் 31-1-71-ம் திகதி 1450 ரூபா மீதியாகக் காட்டியது. அத் திகதிக்குரிய வங்கிக் கூற்று 1950 ரூபா மீதியாகக் காட்டியது. இரண்டையும் ஒப்பிட்டபோது பின்வருந் தவறுகள் காணப்பட்டன.



(அ) வங்கிக் கனுப்பி வங்கியால் வசூலிக்கப்படாத காசோலைகளின் தொகை 775 ரூபா.

(ஆ) வழங்கப்பட்டு வங்கியில் கொடுத்து மாற்றப்படாத காசோலைகளின் தொகை 950 ரூபா.

(இ) காசேட்டில் பதியப்படாத வங்கி திரட்டிய பங்குலாபம் 500 ரூபா.

(ஈ) காசேட்டில் பதியப்படாத வங்கிச் செலவு 25 ரூபா.

(உ) காசேட்டின் வங்கி நிரல் Dr.( ) பாகத்தைக் கூட்டும்போது 150 ரூபா கூடுதலாகக் கூட்டப்பட்டது.

வங்கிக் கணக்கிணக்கக் கூற்றைச் செய்க?

## 31-1-71-ம் திகதி வங்கிக்கணக் கிணக்கக் கூற்று

| | | காசேட்டு வங்கி நிரல் மீதி | வங்கிக் கூற்று மீதி |
|---|---|---|---|
| 31-1-71-ம் திகதி மீதி | | 1450 | 1950 |
| கூட்டுக:- வங்கி திரட்டிய பங்குலாபம் | 500 | 500 | |
| | | 1950 | |
| கழிக்குக:- வங்கிச் செலவு | 25 | | |
| காசேட்டில் கூடுதலாகக் கூட்டப்பட்ட தொகை | 150 | 175 | |
| கூட்டுக:- | | | |
| வங்கியால் வசூலிக்கப்படாத காசோலை | 775 | | 775 |
| | | | 2725 |
| கழிக்குக:- மாற்றப்படாத காசோலை | | | 950 |
| இரு ஏடுகளிலும் இருக்கவேண்டிய மீதி | | 1775 | 1775 |

காசேட்டு வங்கி நிரல் மீதியை இருவகையாகக் குறிப்பிடுவர். காசேட்டைச் செம்மையாக்க முன்னுள்ள மீதி, காசேட்டைச் செம்மையாக்கிய பின்னுள்ள மீதி இவற்றின் வேறுபாட்டைக் கருத்திற் கொள்ளல்வேண்டும்.

## 8. வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களிலிருந்து காசேட்டு வங்கி நிரல் கணக்கையும் வங்கிக் கூற்றையும் தொகுத்துக் காட்டுதல்:-

வங்கிக் கூற்று மீதிக்கேற்ப, அல்லது காசேட்டு வங்கி நிரல் மீதிக்கேற்ப வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுத் தயாரிக்கப்பட்டால் வங்கிக் கூற்றையும், காசேட்டு வங்கி நிரல் கணக்கையும் தொகுத்துக் காட்டலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## I. காசேட்டு வங்கி நிரல் கணக்கைத் தொகுத்தல்.

கணக்குக்குரிய மாதத்துக்கு முன் மாதத்தில் காசேட்டு மீதிக்கேற்ப இணக்கஞ் செய்யப்பட்ட வங்கிக் கணக்கிணக்கக்கூற்றின் மீதியே காசேட்டின் கணக்குக்குரிய மாதத்தின் ஆரம்ப மீதியாக Dr. (        ) பக்கத்தில் பதிதல் வேண்டும்.

அம் மாதத்தில் வங்கிக் கணக்கில் அறவிட்டதாக வங்கிக் கூற்றில் காட்டப்படுந் தொகையுடன், அறவிடப்படாத அல்லது அடுத்த மாதத்தில் அறவிட்ட தொகைகளைக் கூட்டி வருந் தொகையிலிருந்து கணக்குக்கு முன் மாதத்தில் அனுப்பிக் கணக்குக்குரிய மாதத்தில் அறவிட்ட காசோலைகளின் தொகைகளைக் கழித்து வருந் தொகையையே வங்கிக் கனுப்பிய காசோலைகளின் தொகையாகக் காசேட்டு வங்கி நிரலின் Dr. (        ) பக்கத்தில் பதிதல் வேண்டும்.

கணக்குக்குரிய மாதத்துக்கு முன் மாதத்தில் வங்கிக் கூற்றில் உள்ள Cr. (        ) பதிவுகள் ஏதாவது அம் மாதத்தில் காசேட்டில் பதியாதுவிடின் அத் தொகைகளையும், கணக்குக்குரிய மாத வங்கிக் கூற்றில் Dr. (        ) பக்கத்தில் பதியப்பட்டுக் காசேட்டில் Cr. (        ) பதிவகள் செய்யப்படாதுவிடின் அத் தொகைகளையும் காசேட்டு வங்கி நிரலின் Dr. (        ) பக்கத்தில் பதிதல் வேண்டும்.

வங்கிக் கூற்றில் மாற்றப்பட்ட காசோலைகளெனப் பதிந்த தொகையுடன் கணக்குக்குரிய மாதத்தில் வழங்கப்பட்டு வங்கியில் கொடுத்து மாற்றப்படாத காசோலைகளின் தொகையைக் கூட்டி வருந் தொகையிலிருந்து, முன் மாதத்தில் வழங்கப்பட்டுக் கணக்குக்குரிய மாதத்தில் மாற்றப்பட்ட காசோலைகளின் தொகையைக் கழித்து வரும் மீதியையே வழங்கப்பட்ட காசோலைகள் எனக் காசேட்டு வங்கி நிரலின் Cr. (        ) பாகத்தில் பதிதல் வேண்டும்.

கணக்குக்கு முன் மாத வங்கிக் கூற்றின் Dr. (        ) பதிவுகள் அம் மாதக் காசேட்டு வங்கி நிரலில் Cr. (        ) பக்கத்தில் பதியாதுவிடின் கணக்குக்குரிய மாதக் காசேட்டு வங்கி நிரலில் Cr. (        ) பக்கத்தில் பதிதல் வேண்டும். வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக் காட்டும் மீதியை Cr. (        ) பக்கத்தில் பதிந்து காசேட்டு வங்கி நிரலின் தொகுப்பைக் காட்டுதல் வேண்டும்.

—தொடரும்






## மாணவர் மத்தியில் அமைதியின்மை

அ. சக்திவேல், மத்திய மகாவித்தியாலயம், வசாவிளான்.

இன்றைய உலக அரங்கை நோக்குமிடத்து மக்கள் தொகையிற் பெரும்பகுதியினர் இளைஞர்களே. இவர்களிற் படித்தவர்களினதும் பட்டம் பெற்றவர்களினதும் தொகை ஆண்டுதோறும் அதிகரித்துக்கொண்டே செல்கிறது. இந்நிலையில் மாணவர் மனதிற் கொந்தளிப்பும், குழப்பமும் வளர்ச்சியடைந்து உணர்ச்சிபெற்றுக் கிளர்ச்சியை ஏற்படுத்துகிறது. அக்கிளர்ச்சி ஆர்ப்பாட்டம், ஊர்வலம், குழப்பங்கள், ஆட்சேபனைகள் மூலம் வெளிப்படுகின்றது.

மாணவர் மத்தியில் அமைதியின்மை ஏற்படுவதற்குப் பலகாரணங்கள் மூலகாரணமாய் அமைகின்றன. மூத்தசமுதாயத்திற்கும் மாணவ சமுதாயத்திற்கும் இடையிலுள்ள நல்லுறவில் ஏற்பட்டகுந்தகம், அதிகசுதந்திரம், அரசியல் ஈடுபாடு, தொழிற்பிரச்சனைகள் போன்றவையே முக்கிய காரணமாய் அமைகின்றன.

மூத்தோர் காலத்தில் மாணவர் கிளர்ச்சிகள் ஏற்படவில்லை. காரணம் நிறைந்தவாழ்வு, போதிய வேலைவாய்ப்பு என்பன கிடைத்தன. இன்றும் மூத்தோர் கொள்கைகளையும் பழக்க வழக்கங்களையும் கடைப்பிடித்தல் ஏற்றதல்ல. காலச் சுழற்சிக்கும், நாகரீகவளர்ச்சிக்கும், பொருளாதார விருத்திக்கும் ஏற்ப கடைப்பிடிக்கும் கொள்கைகளும் திட்டங்களும் பழக்கவழக்கங்களும் அமையவேண்டும். இன்றைய நிலையை நோக்குமிடத்து மனிதன் வாழ்க்கைக்கு உதவியாக என்னென்னவோ தேடி அலைகின்றான். செல்வம், பதவி, புகழ் முதலியவற்றில் அவன் அலையும் அலைவுக்கு எல்லையே இல்லை. இவற்றால் எல்லாம் அவன் ஒருநாளும் அமைதியடைவதேயில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலத்தில் மூத்தோர், அதாவது பெற்றோர் மாணவர்களை அதிகம் கட்டுப்படுத்துவதில்லை. இதனால் மாணவர் பொருளாதாரம், கலை, கலாசாரம் என்பவற்றில் தன்னிச்சையாக நடக்கிறார்கள். இவ்வாறு தன்னிச்சையாக நடக்கும் மாணவர், ஏதாவது மாற்றம், அல்லது கட்டுப்பாடு தோன்றும்போது அதை மீற முயலுகிறார்கள். இதனால் மூத்தோர் சமுதாயத்திற்கும் மாணவ சமுதாயத்திற்கும் இடையில் உள்ள நல்லுறவு குந்தகப்படுகிறது.

அதிக சுதந்திரம் கொடுத்தால் மாணவர் தமது கிளர்ச்சிக்கு ஆர்ப்பாட்டம், ஊர்வலம், துண்டுப் பிரசுரங்கள், பொதுக்கூட்டங்கள் என்பனவற்றைக் கைக்கொள்ளுகின்றனர். இதனால் இவர்கள் ஒருசாராரைத் தூற்றலும் ஒருசாராரைப் போற்றலும் வீணான விடயங்களில் தலையிடுதல், வீண் கருத்துக்களைப் பொது மேடைகளிலும், ஆர்ப்பாட்ட ஊர்வலங்களிலும் வெளிப்படுத்துதல் போன்றவற்றைச் செய்கிறார்கள்.

பொறுப்புடன் நாட்டுக்கு உழைப்பதற்காக மாணவர்களுக்கு அரசியல் உரிமை வழங்கப்பட்டது. ஆனால் கண்டமிச்சம் ஆர்ப்பாட்டங்களும் கிளர்ச்சிகளுமே. இன்றைய நாகரீகத்திற்கும் கொள்கைகளுக்கும் ஏற்ப சட்டங்கள் இயற்றி மாணவர் மத்தியில் அமைதியை நிலைபெறச்செய்யலாம்.

மாணவர் மத்தியில் குழப்பங்களும் குமுறல்களும் ஏற்படுவதற்கு வேலையின்மையே முதற்காரணம் எனலாம். உலகத்தில் படித்தவரும் பட்டம் பெற்றவரும் படிக்காதோருங்கூட வேலையின்மையால் திண்டாடுகிறார்கள். சனத்தொகைப் பெருக்கத்தால் மாணவர் தொகையும் வேலையில்லாப் பிரச்சனையும் அதிகரித்து வருகின்றன. நமது நாடாகிய இலங்கையை நோக்குமிடத்தும் இப்பிரச்சனையே மாணவரிடம் அமைதியின்மையை ஏற்படுத்துகின்றது. இலங்கையில் பெருகிவரும் மாணவர்தொகையினர் அந்தஸ்தான தொழில்களை எதிர்நோக்கியிருக்கின்றனர். விவசாயம் இழிவான தொழிலென்றும் அரசாங்க உத்தியோகம்தான் வேண்டுமெனம் எண்ணுகின்றனர், பிடிவாதங்கொள்கின்றனர்.



படித்துப்பட்டம் பெற்றவாலிபர் வேலையின்மையால் நலிந்து ஆர்ப்பாட்ட ஊர்வலங்களும், பல கிளர்ச்சி இயக்கங்களும் ஆரம்பிக்கும் இவ்வேளையில் இங்கே அரசாங்கம் ஏழு பல்கலைக்கழகங்களாகக்கூட்ட எத்தனித்திருக்கின்றது. சனத்தொகை பன்மடங்குகூடிய தமிழ்நாட்டிற்கூட மூன்று பல்கலைக்கழகங்களே இருக்கின்றன. இதேவேளையில் இலங்கையில் ஏழு பல்கலைக்கழங்கள் இருந்தால் ஒவ்வொரு பல்கலைக்கழங்களும் வருடாவருடம் ஆயிரம் பட்டதாரிகளை வெளியேற்றும். மூன்று பல்கலைக்கழகங்கள் வெளியனுப்பும் பட்டதாரிகள் வேலை வசதியின்றித்திரியும் இவ்வேளையில் ஏழு பல்கலைக்கழகங்களிலிருந்து வெளிவரும் பட்டதாரிகள் நிலை என்னவாகுமோ தெரியவில்லை.

மேல்நாட்டுப் பாணியைப் பின்பற்றி கல்விகற்பிக்கும் ஆசிரியர்களின் தனிப்போக்கு நிலையாலும் அதாவது சொந்த நாட்டு கலை கலாசாரத்திற்கு அமைய கல்விகற்பிப்பதை விடுத்து ஆங்கில நாகரிகத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கும் கல்வியாலும் பிரச்சனைகள் எழுகின்றன. வெளிநாட்டு உணவில், உடையில், உழைப்பில் தன்னிறைவு கண்டிருக்கும் வேளையில் இலங்கையை நோக்குமிடத்து உணவுப்பிரச்சனை, உடைப்பிரச்சனை, உழைப்புப் பிரச்சனை ஏற்பட்டிருக்கும்போது வெளிநாட்டுப் பாணியை பின்பற்றினால் இலங்கையில் வாழும் மாணவர்கள் பிரச்சனை வரவர அதிகரிக்கும்.

மாணவர்மத்தியில் ஏற்படும் அமைதியின்மைக்கான காரணங்களை ஆராய்ந்து அவற்றிற்கு தகுந்த முறையிலும் நாட்டின் நிலைக்கேற்பவும் சட்டங்களை இயற்றவேண்டும். மாணவர் அரசாங்க உத்தியோகத்தையும் அந்தஸ்தான தொழிலையும் நம்பியிருக்காது பிறர் வாழ்வையும் வளம்படுத்த வேண்டும். நாம் எல்லோரும் நமக்கன்றி. நாட்டுக்காக உழைக்கின்றோம் என்ற நிலை மாணவர் மத்தியில் ஏற்படவேண்டும். இவ்வெண்ணம் மாணவர் மனதில் குடிகொள்ளுமாயின் அமைதியின்மை ஓரளவு தீர்க்கப்படும். அரசாங்கமும் திட்டமிட்ட கல்விமுறையால் இம் மனப்பான்மையை மாணவர்கள் மனதில் வளர்க்கவேண்டும். வேலையில்லாப் பிரச்சனையைத் தீர்க்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6-ம் 7-ம் வகுப்புக்குரியது

## மனித வாழ்க்கையில் தாவரத்தின் பங்கு

புநர்பூசன் கௌரிநாதன் — புத்தளம்

நாம் தினந்தோறும் வேளா வேளைக்கு உண்கிறோம். நம்மவர்களில் அதிகமானோர் மூன்றுவேளை உணவு உண்கிறார்கள். காலை, மதிய, இரவு நேரங்களே அவர்களின் உணவு நேரங்களாகும். மனிதர்களின் உணவு வகைகள் பலவகைகளாகும். ஆனால் இவ்வுணவுகளுக் கெல்லாம் தாவரமே மூலகாரணமாக உள்ளதென்று கூறினால் அது மிகையாகாது.

மனிதன் தனது உணவுக்குத் தாவரத்தின் பகுதியையே உபயோகப்படுத்துகிறான். நீங்கள் ஒருவேளை "ஏன் மனிதன் தாவரத்தை நம்பியா வாழ்கிறான். அவன் இறைச்சி முதலியன உண்டு வாழலாமே?" என வினவலாம். உண்மையே. மனிதன் இறைச்சியை மட்டும் உண்டு தனக்கு வேண்டிய சத்தைப் பெற்றுக்கொள்ள முடியாது. ஆனாலும் அந்த இறைச்சிக்கு நாம் ஆடு, மாடு, மான், மரை போன்ற மிருகங்களையே எதிர்பார்த்திருக்கிறோம். ஆனால் இம் மிருகங்கள்கூட தாவரங்களை நம்பித்தான் உயிர்வாழ்கின்றன. ஆடு, மாடு போன்ற மிருகங்கள் தாவரங்களையே உண்கின்றன. ஆனால் புலிபோன்ற தாவரம் புசியாத மிருகங்கள் ஆடு, மாடுகளைத் தமது உணவுக்கு எதிர்பார்த்திருக்கின்றன. இப்படியே நாம் சிந்தித்துப் பார்த்தால் தாவரங்களை உண்பதனால் சில மிருகங்கள் தம்முடலை வளர்க்க அவ்வுடலை மற்று மிருகங்கள் உண்கின்றன என்பதை அறியலாம். நாமும்கூட இறைச்சியை உண்கிறோம். ஆகவே தாவரம் இல்லாவிடில் ஆடு, மாடு போன்ற தாவரம் உண்ணும் மிருகங்களை நாம் காண முடியாது. அப்போது தமக்கு உணவில்லாமல் சிங்கம், புலி போன்ற மிருகங்களும் ஒழிந்துவிடும். நமக்கு இறைச்சி கிடைப்பதுகூட அரிதாகும்.

அடுத்து இறைச்சி இருந்தால் மட்டும் போதுமா? இன்று இலங்கையைப் பொறுத்தமட்டில் இலங்கை மக்களின் முக்கிய உணவு அரிசியாகும். இன்று அரிசிப் பிரச்சனை உலகத்திலேயே முக்கியமாக விளங்குவது நாம் யாவரும் அறிந்ததே. சோறுடனே நாம் மற்றும் உணவுகளைச் சேர்த்து உண்கிறோம். இங்கேயும் நாம் தாவரத்தையே எதிர்பார்த்திருக்கிறோம்.



இன்னும் நாம் அருந்துகின்ற தேநீர்' கோப்பி முதலியவற்றிற்கான மூலப்பொருள்கள் தேயிலை, கோப்பி, சீனி முதலியனகூடத் தாவரத்தின் பகுதிகளில் இருந்துதான் பெற்றுக்கொள்ளப்படுகின்றன. மனிதன் இன்று விஞ்ஞான அறிவில் வான்முகடுமட்டும் வளர்ந்து விட்டான். அறிவுக்கு, வளர்ச்சிக்கு, ஆராய்ச்சிக்கு, செயலுக்கு, இவை எல்லாவற்றிக்கும் தாவரம் நேராகவும், மறைமுகமாகவும் தொழிற்படுகிறது என்றே கூறலாம்.

இவை எல்லாவற்றிற்கும் பயன்படும் தாவரம் மனிதனின் படைப்பல்ல. அது இயற்கையின் படைப்பு. நம்மாலும், நம்முன்னோராலும் நம்பப்படுகின்ற இறைவனின் படைப்பு, நாம் உணவுக்காகப் பல இடங்களுக்கும் அலைகின்றோம். ஆனால் தாவரம் தான் நின்ற இடத்திலேயே நின்றுகொண்டு நாம் சமைக்கமுடியாத மாப்பொருளைச் சமைக்கின்றது. அதற்கு அது பயன்படுத்துவதுகூட இயற்கைப் பொருள்கள்தாம். அவையாவன சூரியசக்தி, நீர், காபனீர் ஒட்சைட் (கரியமிலவாயு) ஆகும்.

ஆக தாவரம் நம்மை வாழ்விப்பதிலும், உயிர்களின் வாழ்க்கைச் சக்கரத்திலும் மூக்கிய பங்கினைப் பெறுகிறது என்பது மறுக்கமுடியாத தொன்றாகும்.

* *

உருவகக் கதை:

## மரணம்

திக்குவல்லை கமால்

மரமேறியும் இன்னொருவருமாக அங்கே வருவதைக் கண்ணுற்றதும் அந்தத் தென்னைமரத்துக் குருத்தோலைகள் மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தன.

''பழுத்துக் காய்ந்தும் இன்னும் பற்றிப் பிடித்துக் கொண்டிருக்கிறவர்களின் கடைசிக்காலம் நெருங்கிவிட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டது'' என்று மிடுக்குடன் கூறியது ஒரு நடுத்தரக் குருத் தோலை.

''ஆமாம்! இனிமேல் எங்களுக்கு, எங்களது விருப்பப் படி சுதந்திரமாக இருக்கலாம் தானே''- இன்னொரு குருத் தோலை அதை ஆமோதித்தது.

பழுத்த ஓலைகளால் அமைதியாக இருப்பதைத் தவிர, வேறு என்ன செய்ய முடியும்...? தேங்காய் பறிக்க ஏறி ஞல், அத்துடனேயே பழுத்த ஓலைகளையும் பிடுங்கி வீசுவது வழக்கமல்லவா?

இருந்தபோதிலும் ஒரு பழுத்தோலை அமைதியான குர லில் தனது முதிர்ந்த அனுபவத்தை வெளியிடுவதேபோல் ''எப்பொழுதுமே வாழ்ந்துகொண்டிருக்க வேண்டுமென்ற ஆசை எங்களுக்கில்லை! எங்களை மரணம் நெருங்கிக் கொண் டிருப்பது உண்மைதான்...! மரணம் சொல்லிக் கொண்டு வருவதில்லையே! இது வயது முதிர்ந்த எங்களுக்கு மாத்தி ரமல்ல, வயது குறைந்த உங்களுக்கும் பொருந்தும்'' என்றது.

இதைக் கேட்டதும் குருத்தோலைகளெல்லாம் ஒன்று சேர்ந்து ஒரேயடியாக ஏளனித்துச் சிரித்தன.

அதே நேரத்தில் மரத்தடிக்கு வந்து ஏறத்தயாரான வனை நோக்கி மற்றவர் சொன்னுர் ''இன்று பந்தல் ஒன்று அலங்கரிக்க வேண்டியிருக்கிறது. நாலைந்து குருத்தோலை களாய்ப் பார்த்து வெட்டிப்போடும்'' என்று!

ஒரு நிமிடத்துக்கு முன்பு சிரித்த குருத்தோலைகளெல் லாம் அதே வாயால் ஒப்பாரி வைக்கத் தொடங்கின.

''ஐயோ! முதியவர்களே எங்களை மன்னித்து விடுங் கள். உங்களையல்ல, எங்களைத்தான் மரணம் அணைக்கப் போகிறது. ஐயோ......''

பழுத்தோலைகள் மெளனம் சாதித்தன.

மரத்திலேறியவன் குருத்தோலைகளை ஒவ்வொன்ருக வெட்டிக் கீழே போட்டுக் கொண்டிருந்தான்.



சிறுவர் தொடர் நவீனம்:

# பஞ்சவர்ணக் கிளி

மா. குலேந்திரன்

## அத்தியாயம் 3

அவர்கள் இருவரும் நடந்து வந்து குடிசையை அடையும் போது நன்ருக இருட்டிவிட்டது. குடிசையினுள் மங்கலாக விளக்கு ஒன்று எரிந்துகொண்டிருந்தது. வயோதிபன் குடிசைவாயிலை டக்...டக். என்று தட்டிஞன். கதவு திறந்துகொண்டது. அங்கே ஒரு வயோதிபப் பெண்நின்று கொண்டிருந்தாள். அவள் அந்த வயோதிபனின் மனைவியென்பதை இளவரசன் ஊகித்தறிந்து கொண்டான். இளவரசனையும் உள்ளே அழைத்துக்கொண்டு அவ் வயோதிபன் சென்ருன். கதவு தாழிடப்பட்டது. தன்னுடைய மனைவியிடம் யாவற்றையும் ஆதிமுதல் விபரமாகக் கூறிமுடித்தான் அவ்வயோதிபன். அன்றிரவு இருந்த ரொட்டிகளை மூவரும் பகிர்ந்து உண்டனர். இரவிரவாகக் கண்விழித்திருந்து ஒரு பெண் பிள்ளைக்குரிய சட்டையொன்றைத் தைத்து முடித்தாள் அந்த வயோதிபப் பெண்.

மறுநாள் பொழுது புலர்ந்தது. காலை ஆகாரத்தைத் தயாரித்து முடித்தாள் அக்கிழவி. பின்னர் இரு தட்டுக்களில் அவற்றை எடுத் துக்கொண்டு ஒன்றைப் பெண்போலாக்கிவிட்ட அரசகுமாரனின் கைகளில் கொடுத்துவிட்டு மற்றதைத் தான் எடுத்துக்கொண்டு முதன் மந்திரியிடம் சென்ருள். அங்கே பெண்ணைப்போல் இருந்த அரசகுமாரனைத் தன்மகளென்றும் அவள் பெயர் பூங்குழலி என் றும் அறிமுகப்படுத்தி வைத்தாள். எனக்கு வயது போய்விட்டது எனவே இவள் எனி வீட்டு வேலைகளைக் கவனித்துக் கொள்வாள் என்று மேலும் கூறிஞள்.

முதன் மந்திரி சிறிது சிந்தித்தான். அவன் கூறிஞன் ''நீ வீட்டு வேலைகள்முடிய மேல்மாடியில் இருக்கும் அந்த அரசியுடன்போய் இருந்து அவள் மனதை மாற்றவேண்டும். கடந்த ஐந்து வருடங் களாக நானும் என்னவோ எல்லாம் செய்து பார்க்கின்றேன். அவள் மனம்மாற்றமடைவதாகக்காணும்'' என்ருன். அரசகுமரானுக்கோ கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்த மாதிரியிருந்தது.

'சரி' என்று தலையை அசைத்தான் பெண் வேடத்திலிருந்த இளவரசன். சரி உணவை எடுத்துக் கொண்டு மேலே செல்லலாம் என்று உத்தரவிட்டான் முதன் மந்திரி.

அந்த வயோதிபப் பெண்ணைத் தொடர்ந்து சென்ருன் இராச சிங்கன். வயோதிபப் பெண் அறையைக் காட்டி விட்டுத் திரும்பி விட்டாள். உணவுத்தட்டைக் கையிலேந்தியபடி அடிமேல் அடி யெடுத்து வைத்து உள்ளே நுழைந்த இராசசிங்கன் உணவுத்தட்டை மேசைமீது வைத்துவிட்டு கட்டிலில் சாய்ந்திருந்த தன்தாயை உற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கிக்கொண்டு நின்றான். தாயைக் கட்டியணைத்து முத்தமிட வேண்டும் போலிருந்தது அவனுக்கு. கட்டிலில் சாய்ந்திருந்த அவன் தாய் ரஜினி அவனை நோக்கிப் பெண்ணே நீ யார்? என வினவினாள்.

பெண்ணா? அம்மா..... ஓடிச்சென்று அவளைக் கட்டியணைத்துக் கொண்டான் சிறு குழந்தையைப்போல, அம்மாவா? நீயார்? வினவினாள் ரஜினி. அவன் மெதுவாகத் தன்துடையிலிருந்த ஒரு மச்சத்தை அவளுக்கு காண்பித்தான். இ...ரா...ச...சி...ங்...க...ன் அவள் அதரங்கள் அசைந்தன.

ஆம் அம்மா!...நான் உன் மகன் இராசசிங்கன் தான். உன்னை விடுதலை செய்யவும், நமது நாட்டை மீண்டும் கைப்பற்றவும் தான் இந்தப் பெண் வேஷம் போட்டிருக்கின்றேன்.

மகனே! அவள் கட்டி அணைத்துமுத்தமிட்டாள். என்ன மாதிரி வளர்ந்து விட்டிருக்கின்றாய் என்று அவன் மேனியைத் தடவி விட்டாள். தாய்ப்பாசம் அவள் உள்ளத்திலே ஒரு பூரிப்பை ஏற்படுத்திவிட்டது.

அவள் தன் மகனை நோக்கி இந்த முதன் மந்திரி மிகவும் பொல்லாதவன். என்னைத் திருமணம் செய்யவேண்டுமென்று ஆசைப்பட்டுள்ளான். அதோ அந்தக் குதிரைமீது வாளை ஏந்திய படி அமர்ந்திருக்கின்றாரே உன் தந்தை அவரைத் தன் சூழ்ச்சியால் கல்லாகச் சமையும்படி செய்திருக்கின்றான். மற்றவர்கள் எல்லோரும் பரிவாரங்கள். அவர்கள் இருந்த நிலைகளிலே அப்படியே சிலையாகி விட்டார்கள் என்று இராசசிங்கனுக்குச் சாளரத்தின் வழியாகக் காட்டினாள்.

இராசசிங்கனுக்கு ஒரு யோசனை உதித்தது. அவன் தாயிடம் கூறினான் அம்மா நீ அவனை விரும்புவதுபோல நடி. கல்யாணம் செய்து கொள்ளச் சம்மதிப்பதாகத் தெரிவி. பின்னர் அவனுடைய மந்திரத்தின் வல்லமைக்கு என்ன காரணங்கள் என்று கேட்டு அறிந்துகொள். ஆனால் நீ அவசரப்படக்கூடாது. ஆறுதலாகவே செய்யவேண்டும். அவதிப்பட்டால் நான் வந்ததும் நீ சம்மதம் தெரிவித்ததும் எல்லாம் அவனுக்கு நாங்கள் ஏதோ சூழ்ச்சி செய்கின்றோம் என்பதை உணர்த்திவிடும் என்றான்.

ரஜினியும் சற்று ஆலோசித்துவிட்டு அப்படியே செய்வதாக வாக்களித்தாள். பின்னர் வீட்டிலே தன் தாயார், சகோதரி முதலியோர்களின் சுக நலன்களை விசாரித்தாள்.

அன்று இரவு வழக்கம்போல் அவளின் அறையை அடைந்த முதன் மந்திரி அவளின் முகத்தில் மகிழ்ச்சி ரேகைகள் படிந்திருப்பதைக்கண்டு இன்னுஞ் சில நாட்களில் எல்லாஞ் சரியாகிவிடும் என்று எண்ணினான். எப்போதும் போல என்னை நீ திருமணம் செய்து கொள்கிறாயா என்று முதன் மந்திரி ரஜினியை வினவிய போது அவள் வழமைக்கு மாறாக புன்னகை பூத்தாள். இது அவனுக்கு பெரும் வியப்பை ஊட்டியது.

—வளரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org